**O.S.No.24/2016**

பி.வா.சா.1, திரு.சிவசங்கரகுமார்
நாள் : 15.10.2025 நேரம் : 02.30 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)சுப்பிரமணியன் என்பவரின் உடன் பிறந்தவர் தான் முத்தழகுபுலவர் என்றால் சரிதான். சுப்பிரமணியன் என்பவரின் மனைவி தான் செல்லம்மாள் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண். 295/1பி அதன் விஸ்தீரணம் 81 சென்ட் என்றால் சரிதான். மேற்படி சுப்பிரமணியன் என்பவர் 23.12.1996ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். சுப்பிரமணியன் மனைவி செல்லம்மாள் பெயரில் தாவா சொத்திற்கு எந்தவிதமான வருவாய் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி செல்லம்மாள் 2013ம் ஆண்டுக்கு பிறகு தான் இறந்தாரா என்றால் சரியல்ல, 17.03.2011ல் தான் காலமானார்.

2)தாவா சொத்திற்கு செல்லம்மாள் 1996லிருந்து 2011ம் ஆண்டு வரை பட்டா மாற்றம் செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சுப்பிரமணியனின் உடன் பிறந்த சகோதரரான முத்தழகு புலவர் திருமணம் முடிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி முத்தழகு புலவர் திருமணம் முடிக்காததால் தான் 10.01.1996ம் தேதியிட்ட உயில் ஆவணம்(வா.சா.ஆ.12) மூலம் தாவா சொத்தை சுப்பிரமணியன் என்பவர் முத்தழகு புலவருக்கு எழுதி வைத்தார் என்றால் சரியல்ல, அதில் உள்ள கையெழுத்து சுப்பிரமணியனின் கையெழுத்து அல்ல, என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை.

3)நான் தாவா சொத்தை அபகரிக்கும் எண்ணத்துடன் மேற்படி உயிலில் உள்ள கையெழுத்து சுப்பிரமணியனின் கையெழுத்து இல்லை என இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி முத்தழகு புலவருக்கு சுப்பிரமணியன் உயில் எழுதி கொடுத்ததால் தான் அவரது மனைவி தன் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா மாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை

என்றால் சரியல்ல. மேற்படி விவரம் தெரிந்தும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு சொத்துக்கு ஆவணத்தின் அடிப்படையில் தான் பட்டா ஏற்படும் என்றால் சரிதான்.

4)என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் 01.10.1997 லிருந்து 2014 வரை முத்தழகு புலவர் பெயரில் தான் தாவா சொத்திற்கு பட்டா தாக்கலாகி வருகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி முத்தழகு புலவர் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7,8 ன் படி பட்டா மாறுதலான தேதியிலிருந்து RDO உத்தரவு ஏற்பட்ட தேதி வரை தாவா சொத்திற்கு மேற்படி முத்தழகு புலவர் பெயரில் தான் 10(1) அடங்கல் மற்றும் தீர்வை ரசீது தாக்கலாகி வருகிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ஆவணத்தில் வரி செலுத்தியவர் பெயர் முத்தழகு புலவரின் வாரிசான வாதியின் பெயர் தான் உள்ளது என்றால் சரிதான்.

5)என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 ஆவணத்தில் முத்தழகு புலவர் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஆவணமான பட்டா மாறுதலுக்காக மனு கொடுத்தது நான் தான் என்றால் சரிதான். மேற்படி மனுவில் "May personally follow up and get the copy of the patta" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் "B1 சிறப்பு அவசரம்" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். மேற்படி பட்டா மாற்றுவதற்கு வருவாய் கோட்டாட்சியர் அல்லது மாவட்ட வருவாய் அலுவலரிடம் தான் மனு கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

6)எனது உறவினர் மாவட்ட வருவாய் ஆட்சியரின் குடியிருப்பில் மசால்சியாக பணிபுரிந்தாரா என்றால் இல்லை. எனது உறவினர் மேற்படி மாவட்ட வருவாய் ஆட்சியரின் குடியிருப்பில் மசால்சியாக பணிபுரிந்தார் என்றாலும், அவர் வழியாக தான் பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்தேன் என்றாலும் தற்போது இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் குருவட்ட

சர்வேயரிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இருவரின் வாக்குமூலத்திலும் வாதி தான் தற்போது தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7)நான் தாக்கல் செய்த மேற்படி மனுவில் எதிருரை தாக்கல் செய்த வாதிக்கு கால அவகாசம் கொடுக்கப்படவில்லை என்று வாதி மனு கொடுத்துள்ளார் என்றாலும் எதிருரை தாக்கல் செய்ய அவகாசம் கொடுக்காமல் 04.09.2014 தேதியிட்ட உத்தரவிலும் இயந்திரமாக பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு செய்தார் என்றால் சரிதான், ஆனால் RDO உத்தரவை எதிர்த்தா அல்லது DRO உத்தரவை எதிர்த்து மனு செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. மேற்படி மனுவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உரிய நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு உத்தரவிட்டது என்றால் சரிதான்.

8)தாவா சொத்து உண்மையில் முத்தழகு புலவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதை வாதி வாரிசு முறைப்படி பெற்று தற்போது வரை அனுபவத்தில் உள்ளார் என்றாலும் மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்திற்கு உரிமை கோருகிறேன் என்றாலும் சரியல்ல. எனது தரப்பில் பி.வா.சா.ஆ.5 ஆவணமான உயிலின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து இட்டார்கள் என தெரியுமா என்றால் தெரியும், எனது தந்தை ராமமூர்த்தியும், எனது மாமா பாண்டியும் சாட்சி கையொப்பம் இட்டார்கள். மேற்படி பி.வா.சா.ஆ.5 ஆவணம் எங்கு எழுதப்பட்டது என்றால் காரைக்குடி பதிவு அலுவலகத்தில் எழுதப்பட்டது.

9)தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் பி.வாசா.ஆ.5 ஆவணத்தை எனது தந்தை, மாமா மற்றும் எனது தாயார் மோசடியாக தயார் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.5 ஏற்பட்ட காலமான 1997ல் எனது தாயார் பெயரில் எந்த பட்டாவும், ரசீதுகளும் தாவா சொத்தை பொறுத்து

கிடையாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 மோசடியான ஆவணம் என்பதால் தான் அந்த உயிலை எழுதி வாங்கியவர் தன் பெயரில் எந்த பட்டா மாறுதலும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான், எனது அத்தை அப்போது உயிருடன் இருந்ததால் பட்டா மாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. அவரது இறப்பிற்கு பின்னர் தான் நடவடிக்கை எடுத்தோம். மேற்படி எனது அத்தையும், எனது தாயாரும் சுப்பிரமணியனின் உடன் பிறந்தவர்கள் அல்ல என்றால் சரிதான். சுப்பிரமணியன் எனது தாயாரின் உடன் பிறந்தவர் இல்லை என்பதால் அவர் எனது சொந்த தாய்மாமன் இல்லை என்றாலும், முறைக்கு தான் மாமா என்றாலும் சரிதான்.

10)எனது அத்தையான சுப்பிரமணியன் மனைவி செல்லமாளும், மேற்படி செல்லம்மாள் உயில் எழுதி கொடுத்த எனது அண்ணனும் தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி எனது அத்தை மற்றும் அண்ணனின் தாவா சொத்தில் உள்ள அனுபவத்தை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நாளது தேதிவரை வாதி தான் பாத்தியம் அடைந்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 05.12.2023 தேதியிட்ட நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தை வேறு யாருக்கும் கிரையம் கொடுத்தாக குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடவில்லை. தாவா சொத்தை வாதி பாத்தியம் அடைந்து அனுபவம் செய்யும் போது 2ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்றதாக இடையூறு செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11)மேற்படி 2ம் பிரதிவாதிக்கு நான் தாவா சொத்து சம்மந்தமாக மோசடியாக கிரையம் ஏற்படுத்தியுள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் நான் 2ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரைய ஆவணமா என்றால் சரிதான் (சாட்சி ஒப்பு கொண்டதால் மேற்படி கிரைய ஆவணத்தின் SRO நகல் **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்து என்றாலும், ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி என்ன பணி செய்கிறார் என்றால்

வழக்கறிஞராக உள்ளார். மேற்படி கிரையத்தை வாதிக்கு பிரச்சனை ஏற்படுத்த வேண்டும் என ஏற்படுத்தினேனா என்றால் சரியல்ல. நானாகத்தான் தாவா சொத்தை 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தேனா என்றால் நண்பர் என்ற அடிப்படையில் நானாகத்தான் கிரையம் கொடுத்தேன். மேற்படி வா.சா.ஆ.13 ஆவணம் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

12)பி.வா.சா.ஆ.6,8 ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்தப்பட்டதால் செல்லத்தக்கவை அல்ல என்றால் சரியல்ல. அ பதிவேடு நகலை பொறுத்தவரை உரிமையாளர் பெயர் மாறாது என்றாலும், இன்றைய தேதி வரை சுப்பிரமணியன் பெயரில் தான் உள்ளது என்றாலும் சரிதான். அதனால் மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. வாதியின் முன் பாத்தியஸ்தரான முத்தழகு புலவருக்கு எழுதி கொடுத்த சுப்பிரமணியன் பெயரில் தான் இன்றுவரை தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 12 ஆவணத்தை வாதி நிரூபணம் செய்தார் என்றாலும் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.10 ல் உள்ள கையொப்பமும் வா.சா.ஆ.12 ல் உள்ள கையொப்பமும் ஒன்றாக தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் சுப்பிரமணியனின் சட்டப்படியான வாரிசு இல்லை என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

விசாரணை முடிவுற்ற நேரம்: 03.40 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.10.15 15:33:05 +0530